# பாடம் 18: இறைவாக்கினர்கள்

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**
அடிப்படை நிலை (7 வயது) : 1 முதல் 7 கருத்துகளைக் கற்பிக்கவும்
இடைப்பட்ட நிலை (10 வயது) : 1 முதல் 7 கருத்துகளைக் கற்பிக்கவும்
மேம்பட்ட நிலை (13 வயது) : 1 முதல் 11 கருத்துகளைக் கற்பிக்கவும்

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
முந்திய பாடத்தில், நாடுகடத்தலின் காலத்திலும் அதற்கு முன்பும் இஸ்ரயேல் நாட்டுக்கு கடவுள் எப்படி இறைவாக்கினர்களை அனுப்பினார் என்பதை நாம் கற்றோம். இந்த இறைவாக்கினர்கள் சிலைவழிபாட்டு பாவங்களில் இருந்து இஸ்ரயேல் மக்கள் மனந்திருந்த வேண்டுமென்ற கடவுளின் ஆசையையும், அவர்களைப் பாவங்களில் இருந்து விடுவிக்கும் ஒரு மீட்பரின் வருகை குறித்த வாக்குறுதியையும் எடுத்துரைத்தனர். இந்த பாடத்தில், இந்த இறைவாக்கினர்களைக் குறித்து அதிகமாக மற்றும் கடவுளின் மனநிலையை இஸ்ரயேலருக்கு அவர்கள் எப்படி எடுத்துரைத்தனர் என்பதைப் பற்றி நாம் கற்போம்.

**தற்போதைய பாடம்:**
1. இறைவாக்கினர்கள் எப்போதும் ஓர் ஒற்றைச் செய்தியோடு இஸ்ரயேலரிடம் வந்தனர், அதாவது, கடவுளுக்கு எதிராகத் தாங்கள் செய்த பாவத்தில் இருந்து இஸ்ரயேல் மனந்திருந்த வேண்டும் மேலும் அவர்களைப் பாவங்களில் இருந்து மீட்க கடவுள் ஒருவரை அனுப்புவார்.

2. விவிலியத்தில், நான்கு பெரிய இறைவாக்கினர்களும் பன்னிரு சிறிய இறைவாக்கினர்களும் இருக்கின்றனர். அவர்கள் எல்லாரும் வெவ்வேறு காலகட்டங்களில், சிலர் நாடுகடத்தலுக்கு முன்பு, மற்றவர்கள் நாடுகடத்தலின் பொழுது, இன்னும் பிறர் நாடுகடத்தலுக்குப் பின்பு.

நான்கு பெரிய இறைவாக்கினர்கள்:
- எசாயா (நாடுகடத்தலுக்கு முன்பு, யூதா)
- எரேமியா (நாடுகடத்தலுக்கு முன்பு, யூதா)
- எசேக்கியேல் (நாடுகடத்தலின் பொழுது)
- தானியேல் (நாடுகடத்தலின் பொழுது)

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான குறிப்பு:**
இவர்களில் யாரேனும் ஓர் இறைவாக்கினரை மாணவர்களுக்கு அறிமுகம் செய்து, அந்த இறைவாக்கினரைக் குறித்த விவிலியக் கதைகள் சிலவற்றை அவர்களுக்கு கூறவும்.

பன்னிரு சிறிய இறைவாக்கினர்கள்:
- ஓசேயா (நாடுகடத்தலுக்கு முன், இஸ்ரயேல்)
- ஆமோஸ் (நாடுகடத்தலுக்கு முன், இஸ்ரயேல்)
- யோனா (நாடுகடத்தலுக்கு முன், இஸ்ரயேல்)
- மீக்கா (நாடுகடத்தலுக்கு முன், யூதா)
- நாகூம் (நாடுகடத்தலுக்கு முன், யூதா)
- அபக்கூக்கு (நாடுகடத்தலுக்கு முன், யூதா)
- செப்பனியா (நாடுகடத்தலுக்கு முன், யூதா)
- யோவேல் (நாடுகடத்தலுக்குப் பின்பு)
- ஒபதியா (நாடுகடத்தலுக்குப் பின்பு)
- ஆகாய் (நாடுகடத்தலுக்குப் பின்பு)
- செக்கரியா (நாடுகடத்தலுக்குப் பின்பு)
- மலாக்கி (நாடுகடத்தலுக்குப் பின்பு)

3. பெரிய இறைவாக்கினர்கள் மற்றும் சிறிய இறைவாக்கினர்களுக்கு இடையிலான ஒரே வேறுபாடு விவிலியத்தில் உள்ள அவர்களது நூல்களின் அளவே! பழைய ஏற்பாட்டில் உள்ள பெரிய இறைவாக்கினர்களின் நூல்கள் சிறிய இறைவாக்கினர்களுக்கு உரியவற்றை விட மிகப் பெரியவை.

4. பழைய ஏற்பாட்டு இறைவாக்கினர்கள் பேசிய பொழுதெல்லாம், அவர்கள் கடவுளின் பெயரால் பேசினர். அவர்களின் வார்த்தைகள் அனைத்தும் ஆண்டவரின் சொந்த வார்த்தைகள் என்பதே இதன் பொருள். ஏனெனில் அவர்கள் கடவுளின் வார்த்தையைப் பேசினர், இந்த

இறைவாக்கினர்கள் கூறியவற்றில் பெரும்பாலானவை மக்களின் மனச்சான்றைக் குத்தியதால், அவர்கள் இவர்களை வெறுத்தனர். அதன் விளைவாக, கடவுளின் வார்த்தைகளைப் பேசியது இறைவாக்கினர்களின் உயிருக்கு ஆபத்தானது, மேலும் அவர்களை அறியப்படாதோராகவும் ஆக்கியது. இதன் காரணமாகவே அத்தகைய அழைப்பினை ஏற்பதற்கு இறைவாக்கினர்கள் தயங்கினர். அவர்கள் தாங்களே இறைவாக்கினர்களாகச் செயல்படவில்லை, மாறாக அந்த நிலைக்கு கடவுளால் அழைக்கப்பட்டனர். அவர்களில் சிலர் தங்களின் அழைப்பு எத்தகையது என்பதைக் குறித்து பழைய ஏற்பாட்டில் எழுதியுள்ளனர்.

5. ஒவ்வோர் இறைவாக்கினரும் தமக்கு விருப்பமான விதத்தில் கடவுளின் எச்சரிக்கை மற்றும் இஸ்ரயேலுக்கான கண்டிப்பை எடுத்துரைத்தனர். இங்கு ஈர்ப்பான மூன்று எடுத்துக்காட்டுகள்:

*ஆமோஸ்:* எசாயா போன்ற இறைவாக்கினர்கள் இந்த அழைத்தலில் தங்கள் வாழ்நாள் முழுவதையும் செலவிட்ட நிலையில், இறைவாக்கினர் ஆமோசுக்கு ஒரே ஒரு எய்துபணி மட்டுமே வழங்கப்பட்டது. ஆமோஸ் யூதா அரசில் தமது ஆடுமேய்க்கும் பணியை விட்டுவிட்டு, வடக்கே சென்று இஸ்ரயேல் அரசின் பெத்தேல் மக்களுக்கு கடவுளின் கடும் எச்சரிக்கையை வழங்க அழைக்கப்பட்டார். ஆமோஸ் இந்த எச்சரிக்கையை வழங்க ஓர் ஈர்ப்பான வழியைக் கொண்டிருந்தார். அவர் நகரின் சதுக்கத்தில் மக்களைத் திரட்டி, இஸ்ரயேலை அடுத்துள்ள எதிரிகளுக்கான எல்லாவிதக் கண்டனங்கள் மற்றும் தண்டனைகளை உரக்கக் கூறினார். கடவுளின் சாபத்தை அடுத்து பெறவிருப்பது யார் என்ற எதிர்பார்ப்புடன் மக்கள் கூட்டம் மகிழ்சியாக செவிமடுத்துக் கொண்டிருந்தது. ஆறாம் நாடு பற்றிக் கூறியதும், ஏழாவது எது என்று கேட்க மக்கள் முனைப்புடன் இருந்தனர், ஏனெனில் ஏழு என்ற எண் முழுமை மற்றும் நிறைவின் அடையாளம். எல்லாவற்றிலும் மிகவும் தண்டிக்கின்றத் தீர்ப்பாக இருக்கும் என்று, ஆமோஸ் பெத்தேலைக் குறிப்பிட்டார். இயல்பாக நகரிலிருந்து துரத்தப்பட்ட அவர் தமது மந்தையிடம் திரும்பிச் சென்றார்.

*ஓசேயா:* வடக்கு அரசான இஸ்ரயேலின் ஓர் இறைவாக்கினராக, ஓசேயா தமது சொந்த வாழ்வின் வழியாக ஓர் இறைவாக்குச் செய்தியை கடவுளின் மக்களிடம் பகிர்ந்தார். ஓசேயா மனைவி கோமேர் அவருக்கு நம்பகமற்றவளாக இருந்தாள், ஆனால் அவர் இன்னும் அவளை அன்பு செய்தார். தமது வேதனை வழியாக கடவுள் எப்படி நம்பகமற்ற மக்களை இன்னும் அன்பு செய்கிறார் என்று அவர் புரிந்துகொண்டார். இஸ்ரயேலர் இனப்பெருக்கச் சடங்குகளில் கானானிய தெய்வமான பாகாலை வழிபட்டப் பொழுது விபச்சாரம் மற்றும் சிலைவழிபாட்டின் ஒப்பீட்டைப் பயன்படுத்தி அவர்களுக்கு அறைகூவல் விடுத்தார். நம்பகத்தன்மைக்குத் திரும்ப அவர்களை அழைத்த அவர், பாலைநிலத்தில் கடவுளுடன் செய்த உடன்படிக்கையை நினைவூட்டி, கடவுள் இன்னும் நம்பகமாக இருக்கிறார் என்று வாக்களித்தார்.

*எரேமியா:* இந்த இறைவாக்கினர் துயருறும் தலைவராக இருந்தார். அவரைப் பார்த்த உடன் மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளும் விதங்களில் தமது செய்தியை செயலில் காட்டினார். எரேமியா 18:1-6 மற்றும் 19:1-12ல், தமது செய்தியை வழங்க குயவர் வீட்டில் மட்கலம் செய்ததை இறைவாக்கினர் பயன்படுத்துகிறார். எரேமியா 28ல், எருசலேம் பாபிலோனுக்குப் அடிபணிய அல்லது அழிக்கப்பட வேண்டும் என்பதைக் காட்ட மாடுகளைப் பூட்டும் நுகத்தை இறைவாக்கினர் அணிந்துள்ளார். எரேமியாவின் செய்தி அவர் கொடூரமாகத் துன்புறுத்தப்படக் காரணமாக அமைந்தது.

6. பெரும்பாலான நேரங்களில், இறைவாக்கினர்களின் வார்த்தைகள் மக்களை அவர்களின் பாவங்களுக்காகக் கண்டிப்பதாகவும், அவர்களை மனந்திருந்த அழைப்பதாகவும் இருந்தன. சில நேரங்களில், கண்டிக்கப்பட்டவர்கள் செவிமடுத்து மனந்திருந்தினர், மற்ற நேரங்களில், அப்படி செய்யவில்லை. சில நேரங்களில் அவர்களின் செய்திகள் மெய்யான சினத்துடன் ஒலித்தன, அவை செய்தியைப் பெற்றவர்களுடனான கடவுளின் சினத்தைக் குறித்தன; கடவுள் சினமுற்றவராகக் காணப்படும் பொழுதிலும், இறைவாக்குச் செய்திகள் எப்போதும் கடவுளின் அன்பையும், அவர்கள் பதிலன்பு காட்டுவதற்கான அவரது ஆசையையும் வெளிப்படுத்தின.

7. வெளிநாட்டு பிறசமயச் சக்திகள் இஸ்ரயேலை வெல்லவும் இழிவுபடுத்தவும் கடவுள் அனுமதித்த விதம், இஸ்ரயேலின் கீழ்ப்படியாமை மற்றும் கிளர்ச்சியால் அவர் அடைந்த ஏமாற்றத்தையும் வேதனையையும் காட்டுகிறது. அத்தகைய வேதனைநிறை தண்டனை வழியாக அவர்களைத் திருத்தினாலும், இந்த நாடுகடத்தலின் பொழுது அவர்களை அவர் கைவிடவில்லை. அவர் தொடர்ந்து அவர்களை வழிநடத்தவும், அவர்களை மனந்திருந்த வலியுறுத்தவும், மேலும் அவர்களுக்கு விரைவில் உதவி வருமென உறுதியளிக்கவும் தமது இறைவாக்கினர்களை அனுப்பினார்.

8. கடவுள் நம்மை அன்பு செய்கிறதால், தமது புனிதநிலை மற்றும் நன்மைத்தனத்தின் தரநிலைகளை நமக்காகக் கைவிட விரும்புகிறார் என்பது பொருளன்று. தமது நிறைவுக்கு நம்மை உயர்த்துவதே அவரது நோக்கம், நமது பாவநிலை மற்றும் நெறிகேட்டின் நிலைக்கு தாழ்த்துவதன்று. அவர் அன்புள்ளவர், ஆனால் அவர் தூயவராகவும் நிறைவுள்ளவராகவும் இருக்கிறார். நாம் மனந்திருந்தும் பொழுது அவர் அருளும் இரக்கமும் நிறைந்தவராய் இருக்கிறார், ஆனால் அவர் நீதியுள்ளவராகவும் இருக்கிறார்.

9. நமது கத்தோலிக்க வாழ்வை முறையான விதத்தில் நாம் வாழத் தவறும் நேரங்களில், இஸ்ரயேல் நாட்டுக்கு இறைவாக்கினர்கள் செய்தது போன்று நம்மைக் கண்டிக்கவும் தண்டிக்கவும் சில மனிதர்களைக கடவுள் அனுப்பலாம். இந்த மனிதர்கள் நமது வாழ்வில் ''இறைவாக்கினர்கள்'' போன்றவர்கள், நாம் அவர்களின் எச்சரிக்கைகளை நன்றாகக் கவனிக்க வேண்டும்.

10. கடவுள் நம்மைத் தண்டிக்கும் பொழுது நாம் வியப்புறக் கூடாது. தந்தை தமது பிள்ளைகளைத் தண்டிப்பது போன்று கடவுள் நம்மைத் தண்டிக்கிறார் என்பதை எபிரேயர் 12:7 நமக்கு நினைவூட்டுகிறது.

11. இறைவாக்குரைக்கும் கொடை தூய கத்தோலிக்கத் திருச்சபையில் இன்றும் தொடர்கிறது, மேலும் ''கடவுளின் தூய மக்கள் கிறிஸ்துவின் இறைவாக்கினரிய அலுவலையும் பகிர்ந்து கொள்கின்றனர்; சிறப்பாக விசுவாச மற்றும் பிறரன்பு வாழ்வாலும், கடவுளின் பெயரை வாயால் புகழ்ந்து மதிப்பளிக்கும் புகழ்ச்சி பலியை அவருக்குச் செலுத்துவதாலும் அவருக்கான வாழும் சாட்சியத்தை அது தொலைவில் பரப்புகிறது'' (*உலகின் ஒளி*, 12).

எனினும், மேற்குறிப்பிட்டது போன்று இந்த இறைவாக்கினரிய அலுவல் ஒருவரின் விசுவாசச் சாட்சியத்தை இறைவாக்காகச் சுட்டுகிறது. இது கிறிஸ்துவின் உடலைக் கட்டியெழுப்பத் திருச்சபையின் சில உறுப்பினர்களுக்கு வழங்கப்படும், இறைவாக்குரைத்தல் என்ற சிறப்பு அருட்கொடையில் இருந்து சற்று வேறுபட்டது. அதனோடு, இறைவாக்கினராகச் செயல்பட இறைவாக்குரைத்தல் என்ற சிறப்பு அழைத்தலும் இருக்கிறது. இறைவாக்குரைக்கும் சிறப்பு அருட்கொடை கொண்ட ஒரு நபர், ஓர் இறைவாக்கினர் என்று அழைக்கப்பட அவசியமில்லை.

ஆகவே ''இறைவாக்குரைத்தல்'' என்ற பதம் மூன்று வேறுபட்ட அம்சங்களைச் சுட்டுகிறது:
அ) எல்லா நம்பிக்கையாளர்களும் இயேசு கிறிஸ்துவின் இறைவாக்கினரிய அலுவலைப் பகிர்ந்து கொள்கின்றனர், அது அவர்களின் திருமுழுக்கில் இருந்து வருகிறது, அதன் வழியே உலகில் தங்களின் விசுவாசத்திற்கு சாட்சியாக இருக்க அழைக்கப்பட்டுள்ளனர்.
ஆ) இறைவாக்குரைத்தலின் சிறப்பு அருட்கொடை, கிறிஸ்துவின் உடலைக் கட்டியெழுப்பத் திருச்சபையின் சில உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
இ) இறைவாக்கினராக இருப்பதற்கான அழைத்தலில், தமது பெயரால் பேசுவதற்கு கடவுள் ஒருவரை அழைக்கிறார்.